[2018 ஜூன் 5

பயணிகளின் வருகை, எண்ணிக்கை மற்றும் அவ்விடங்களின் முக்கியத்துவங்களைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

பேருந்து வசதி

***12526—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரத்திலிருந்து, ஊ.கொளப்பாக்கம் வழியாக நெய்வேலிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

கம்மாபுரம் ஒன்றியம், கம்மாபுரத்திலிருந்து, பழமலை, கொளப்பாக்கம், அரசகுழி வழியாக நெய்வேலிக்கு பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பழமலைக்கும், அரசகுழிக்கும் இடையேயான தூரம் 4 கி.மீ. ஆகும். அது ஒரு புதிய வழித்தடம் ஆகும். அங்குள்ள சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும், அந்த வழித்தடம் தற்போது பேருந்து இயக்குவதற்கு ஏதுவாக இல்லாத காரணத்தாலும், அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, கழக செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கம்மாபுரத்திலிருந்து ஊ. கொளப்பாக்கம் வழியாக நெய்வேலி செல்லும் வழித்தடத்தில் உள்ள கிராமங்களான கம்மாபுரம், சு.கீணனூர், கோபாலபுரம், குமாரமங்கலம், கொளப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள 10–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் நெய்வேலி மற்றும் மாவட்டத் தலைநகரான கடலூர் நகரத்திற்குச் செல்ல விருத்தாசலத்திற்கு சென்று, அங்கிருந்து சுமார் 15 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. இது, இப்பகுதி மக்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது, நேரம் வீணாகிறது. மேலும், இப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்கள், நெய்வேலி மற்றும் அதன் அருகிலுள்ள கங்கைகொண்டான் பேரூராட்சி பகுதிகளிலுள்ள சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் இப்பகுதிகளிலுள்ள கல்லூரி மற்றும் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் என அனைத்துத் தரப்பு மக்களும் நெய்வேலிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், நெய்வேலியிலிருந்து கம்மாபுரம் செல்லும் வழித்தடத்தில் நெய்வேலி மற்றும் கங்கைகொண்டான் பேரூராட்சி அருகிலுள்ள கிராமங்களான வடக்குவெள்ளூர், தெற்குவெள்ளூர், வேப்பங்குறிச்சி, ஊ.மங்கலம், அம்பேத்கர் நகர், யு.மங்கலம், ஊத்தங்கல், கொம்பாடிக்குப்பம், அரசகுழி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகள் ஆகியவற்றில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் இதர அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் கம்மாபுரம் செல்ல வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பகுதியிலே குறுகிய சாலையாக இருப்பதால், அங்கு தற்போது பேருந்து இயக்க வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்தார்கள். பாரதப் பிரதமர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அந்தச் சாலை தற்போது அகலப்படுத்தப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டு புதிதாகப் போடப்படவுள்ளது. எனவே, இந்த பேருந்து வழித்தடத்தில்

பேருந்து இயக்கினால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் சுமார் 15 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை தவிர்க்கப்படும். எனவே, அப்பகுதியிலுள்ள மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவ, மாணவிகள் ஆகியோரின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழித்தடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, உடனடியாக பேருந்து இயக்கிட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடத்தை நேற்றே ஆய்வு செய்தோம். அந்த வழித்தடத்தில் தற்போது புதிதாகச் சாலைகள் அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளெல்லாம் முடிவுற்ற பிறகு, அந்த வழித்தடத்தை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிதம்பரத்திலிருந்து புவனகிரி, மருதூர், தலைகுளம், பின்னலூர், வடலூர் வழியாக, நெய்வேலி செல்லும் தடம் எண் 347 என்ற பேருந்து கடந்த 5 வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. புவனகிரியிலிருந்து வடலூர் வரை உள்ள கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு, நெய்வேலி, வடலூர் மற்றும் புவனகிரி செல்வதற்கு இந்தப் பேருந்து இயக்கப்பட்டபோது வசதியாக இருந்தது; தற்போது இந்தப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் சிரமமாக உள்ளது. எனவே, இந்தப் பேருந்தினை மீண்டும் இயக்கிட மாண்புமிகு அமைச்சர்

2018 ஜூன் 5]

அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த வழித்தடத்தினை ஆய்வு செய்து, அந்த வழித்தடத்திலே பயணிக்கின்ற பயணிகளுடைய அடர்வுக்கு ஏற்ப பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

அன்னதானத் திட்டம்

***9750—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் உள்ள அருள்மிகு வீரபாண்டீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உலகப் பெண்ணினத்தின் ஒப்பற்ற தலைவர், வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS